Date – 20.11.2025

MCOP – 138/2006

**ம.சா.1– சீனிவாசன்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

நான் ஓட்டி சென்ற TN 29 W 0147 என்ற ஆட்டோவின் உரிமையாளர் ஆனந்து ஆவார். நான் ஆட்டோவை ஓட்டி சென்ற போது அதன் உரிமையாளர் ஆனந்து என்பவரும் அந்த ஆட்டோவில் தான் வந்தார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக ஆனந்து தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவயிடம் இராயக்கோட்டை சாலையில் சானசந்திரம் பிரிவு என்றால் சரிதான். நான் ஓசூரில் இருந்து சானசந்திரம் சென்று கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு எதிரே ஒரு லாரி வந்தது என்றால் சரியல்ல. பள்ளி வாகனம் வந்தது. புகார் கொடுத்த ஆனந்து எதிரே லாரி வந்ததாகவும், அதை தடுத்து செல்ல முற்பட்ட போது பள்ளி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தான் ஆஜாக்கிரதையாக ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது ஓட்டி விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகாவது புகார் குறித்தோ, முதல் தகவல் அறிக்கை குறித்தோ தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு நான் தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பா சொன்னார். மனுவில் கையொப்பம் நான் செய்தேனா என்றால் நான் தான் செய்தேன். அப்போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும். காவல் நிலையத்தில் என் மீது தவறு இல்லை என்று கூறி தனியாக புகார் எதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய ஓட்டுனர் உரிமம் 04–06–1999 ம் தேதி முடிந்து விட்டது என்றால் சரிதான். விபத்தானது 09–08–2005 ம் தேதி

என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு முதலில் அரசு மருத்துவ மனைக்கும், பின் விஜயா மருத்துவ மனைக்கும் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். விஜயா மருத்துவ மனையில் சிகிச்சை பார்த்ததிற்கான மருத்துவ பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ ரசீதுகளை சம்மந்தப்பட்ட மருத்துவ மனை மூலமாக தான் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். பேருந்து ஓட்டுனரின் தவறால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக குற்றவியல் வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். பேருந்து ஓட்டுனரின் கவனகுறைவால் விபத்து ஏற்படவில்லை என விசாரணை அறிக்கை தாக்கல் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுனர் உரிமமும் 01-07-2005 ம் தேதி உடன் முடிந்து விட்டது என்றால் எனக்கு தெரியாது. அதனால் அதன் உரிமையாளர் தான் காப்பீடு வழங்க வேண்டுமென்றும், காப்பீட்டு நிறுவனம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதாலும், எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததாலும், முழுமையான இழப்பீடு கிடைக்க தகுதி இல்லை என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்திர ஊனமோ, செயல் திறன் பாதிப்பு, வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை: இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P.Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur